விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 சித்திரை 14 றஜப் 23 இதழ் 71
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 26—4—84

## இலங்கை சம்பவங்கள் சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்தவேண்டும்!

### உலகத் தமிழ் இளைஞர் பேரவை கோரிக்கை

(சென்னை)

இலங்கைச் சம்பவங்கள் குறித்து சர்வதேச நீதிமன்றம் ஒன்று விசாரணை நடத்தவேண்டும் என்று உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் செயற்குழு மாநாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாநாட்டின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பெண்களின் உரிமைக்காக போராடிவந்த திருமதி நிர்மலா நித்தியானந்தன் உட்பட சகல கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனவும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று கேட்டுள்ளது. (மு)

### 182பேர் பொலிசில் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதங்கள் தொடர்
(8-ம் பக்கம் பார்க்க)

# "இலங்கை தமிழர் அனாதைகளல்ல"

## சென்னை மாநாட்டில் தமிழக முதல்வர்

### ஆயுதப் பயிற்சி செய்திகளுக்கு மறுப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழ் மக்கள் அனாதைகள் அல்ல என்பதை இலங்கை அரசு உணரவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கப்படுவதாகக் கூறப்படுவதைத் தமிழக முதல்வர் வன்மையாகக் கண்டித்தார்.

சென்னையில் இரண்டு நாட்களாக நடைபெற்ற இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து ஆராய்வதற்கான மாநாட்டில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களான திரு பிரபாகரன், திரு உமாமகேஸ்வரன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவித்த திரு ராமச்சந்திரன், வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிவித்தார் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கை தீவிரவாதிகளுக்கு தமிழகத்தில் ஆயுதப் பயிற்சியளிக்கப்படுவதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானது அதற்கான சாட்சியங்கள் எதுவுமே எம்மிடம் இல்லை

"இலங்கையில் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டிய காலம் இது திரு அமிர்தலிங்கம் போன்றவர்கள் நாடு திரும்பி அதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

"இராணுவத்தை தாக்குவதற்காக அவர்களிடமிருந்தே தமிழ்த்தீவிரவாதிகள் துப்பாக்கிகளை பறித்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழகம் ஆயுத
(8-ம் பக்கம் பார்க்க)

## "தீவிரவாத இயக்கங்கள் ஒன்றுபடவேண்டும்"

### 'அமிர்' கோரிக்கை

(சென்னை)

தமிழ்மக்களின் பொது நலனைக் கருத்திற்கொண்டு தீவிரவாத இயக்கங்கள் உட்பட சகலரும் ஒன்றுபட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒருமித்த அணுகுமுறை இருந்தால்தான் தமிழ் மக்களின் போராட்டம் வலுவானதாக இருக்குமென்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் தொடர்பான மாநாட்டில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழக மின்சக்தி அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் பேசுகையில் "இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரமானதே பாதகமான சூழ்நிலையை அரசாங்கம் தோற்றுவித்ததாலேயே இப்படியானதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

## பெருமளவு வெடி மருந்து கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

ஒரு நகரத்தையே தகர்க்கக் கூடிய சக்தி மிக்க பெருமளவு வெடிமருந்துகளையும் டைனமைற், எரிதிரிகளையும் மன்னார் பொலிசார் அங்குள்ள ஒரு வீட்டிலிருந்து கைப்பற்றியுள்ளனர்.

இலங்கையில் இயங்கும் தீவிரவாதிகளுக்கு இந்தியாவிலிருந்து
(8ம் பக்கம் பார்க்க)

## கரை ஒதுங்கிய சடலங்கள்: அடையாளம் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கடற்கரையில், நேற்று முன்தினம் இரவு கரை ஒதுங்கிய சில சடலங்களும், நேற்று யாழ். பெரியாஸ்பத்திரிப் பிரேத அறையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவன், பிரேத பரிசோதனை செய்தார் நேற்றுப் பிற்பகல்வரை இச் சடலங்களுக்கு எவரும் சொந்தம் கோரவில்லை சடலங்களை எவரும் அடையாளம் காட்டவில்லை

இச்சடலங்கள் யாழ். பெரியாஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலைமுதல் பலர் வந்து சடலங்களைப் பார்வையிட்டபோதும், எவரும் அடையாளம் காணவில்லை. (ஏ)

## மூடப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி காலவரையறையின்றி நேற்று மூடப்பட்டதாக கல்லூரிப் பணிப்பாளர் திரு ஆர். ராஜரத்தினம் அறிவித்துள்ளார்.

## பிரிட்டிஷ் தொழிற்கட்சிஎம். பி. யாழ். விஜயம்

### எரிந்த சேதமுற்ற கட்டிடங்கள் வாகனங்களைப் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் தொழிற்கட்சி எம். பியான திரு ஜெரிமிகொபின் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வந்து எரிந்து சேதமுற்ற கட்டிடங்களையும், வாகனங்களையும் நேரில் பார்வையிட்டு இங்கு நடந்த அசம்பாவிதங்களை நேரில் பலரிடம் கேட்டறிந்துகொண்டார்.

யாழ் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் ஹூலர் ஜெபசிங்கம், செயலாளர் சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணி
(8ம் பக்கம் பார்க்க)

## 'சமஷ்டி - சுயாட்சி - பிரிவினை வெறும் வரட்டுவாதம்'

### —அமைச்சர் லலித்

(கொழும்பு)

"சமஷ்டி, சுயாட்சி, பிரிவினை என்று கோருவதெல்லாம் வெறும் வரட்டு வாதங்கள் நியாயமான ஓர் அரசியல் அமைப்புக்குள்தான் எமது பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்" என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி நேற்று இலங்கை மின்சார சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

"பயங்கரவாதிகளுக்கு மன்னிப்பு அளிக்க நாம் தயார்" என்று வலியுறுத்திய அமைச்சர் லலித்;

"மாவட்ட அடிப்படையில் பிரச்னைகளைத் தீர்க்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் மாகாண மட்டத்தில் அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்கின்றனர். ஏனையோர் பிராந்திய அடிப்படையில் அதிகாரம் பன்முகப்படுத்தப்படவேண்
(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி சம்பளப்பணம் ரூபா 1,22,000 கொள்ளை! இரு நபர்களின் கைவரிசை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியில் சம்பளப் பணம் ஒரு லட்சத்து 22ஆயிரம் ரூபா நேற்று நண்பகல் சுமார் 12 30 மணியளவில் இனந் தெரியாத இருநபர்களால் துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் சம்பளப்பணம் சம்பளம் வழங்கப்படுவதற்காக கல்லூரி அலுவலக நிதி அறையிலுள்ள இரும்புப்பெட்டகத்தில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தது.

நண்பகல் 12-30 மணியளவில் நிதி அறைக்குள் துப்பாக்கி சகிதம் பிரவேசித்த இரு இளைஞர்கள் இதற்குப் பொறுப்பானவரை மிரட்டி பெட்டகத்தைத் திறக்குமாறு கோரி பெட்டகம் திறக்கப்பட்டதும் பணத்தை அபகரித்துக் கொண்டு சைக்கிளில் ஏறித் தப்பி ஓடிவிட்டனர்

ஏறாவூர் பொலிசார் இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (வெ

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் பலி!

(மட்டக்களப்பு)

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது களுவாஞ்சிக்குடிப் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் பெரியகல்லாற்றில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இளைஞரொருவர் பொலிஸ் வாகனத்தைத் தாக்கிவிட்டுத் தப்பியோட முயன்றபோது பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே பலியானார்.
(8ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் இடமாற்றம் ரத்து!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பொலிசாருக்குக் கிடைத்த இடமாற்றங்களில் கொழும்புப் பிரிவுக்கு இடமாற்றம் கிடைத்தவர்களைத் தவிர மற்றும் சகல இடமாற்றங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மேலிடத்திலிருந்து நேற்று இடமாற்றங்களை ரத்துச் செய்யும் உத்தரவு கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது

மே மாதம் 5-ம் திகதி இந்த இடமாற்றம் நடைபெறவிருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனிலுள்ள லிபியத்தூதரகத்தில் தேடுதல் நடத்தினால் பதிலடி!

## திரிபோலியிலுள்ள பிரிட்டிஷ் அலுவலகத்தில் தேடுதல் நடத்தப்படும் என்கிறது லிபியா

திரிப்போலி, ஏப். 25

லண்டனிலுள்ள லிபியத் தூதராலயத்தினுள் பிரிட்டிஷ் காவற்படையினர் தேடுதல் நடத்தினால் லிபியாவிலுள்ள பிரிட்டிஷ் தூதராலயத்தினுள் லிபியா தேடுதல் நடத்தும் என்று லிபிய வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

லண்டனிலுள்ள லிபியத் தூதராலயத்தில் ஆயுதங்கள் இருக்கின்றதா என்பது குறித்து அறிவதற்காக தூதரகக்கட்டிடம் சோதனையிடப்படுமென்று பிரிட்டன் அறிவித்திருந்தது.

பிரிட்டனின் இந்த அறிவிப்பு குறித்து கருத்து வெளியிட்ட லிபியாவின் வெளியுறவு அமைச்சர் திரு. அலி த்ரீகி தமது தூதராலயத்தினுள் அப்படி ஒரு சோதனை நடத்தப்படுமானால் திரிப்போலியிலுள்ள பிரிட்டிஷ் தூதரகமும் இதே போன்றதொரு சோதனைக்கு உட்படுத்தப்படுமென்று தெரிவித்தார்.

## பொது மக்கள் அச்சம்

(வவுனியா)

ஆயுதப்படையினர் வவுனியா நகருக்குள் வந்து விட்டால் பொதுமக்கள் மத்தியில் ஒரு வித அச்சம் தென்படுவதை அவதானிக்க முடிகிறது.

எந்த நேரம் என்ன நடக்குமோ என்பது தான் மக்கள் மத்தியில் உள்ள பீதியாகும்.

நகருக்கு ஆயுதப்படையினர் வந்து நின்றால் அப்பகுதி வீதியால் செல்ல மக்கள் அஞ்சுகின்றார்கள்.

## மக்கள் வங்கி வாடிக்கையாளர் கஷ்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையின் அலுவலக நேரம் குறைக்கப்பட்டதன் காரணமாக தூர இடங்களில் இருந்தும் வங்கி அலுவல் காரணமாக வருகின்ற வாடிக்கையாளர்கள் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றனர்.

வங்கியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக குறிப்பிட்டளவு வாடிக்கையாளர்கள் மட்டும் குறிப்பிட்டளவு நேரத்தில் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக அதிகமான வங்கி வாடிக்கையாளர்கள் வெளியில் வெய்யிலில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (வெ)

# 'இலங்கைத்தமிழரைக்காக்க ராணுவத்தை அனுப்பவும்!'

மதுரை, ஏப். 25

இலங்கைத்தமிழர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பளிப்பதற்காக இந்திய இராணுவத்தை அங்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற தீர்மானம் மதுரையில் நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் மதுரை லோகசபை அங்கத்தவரும் சட்டசபை உறுப்பினருமான திரு. முத்து, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன், காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரிஅனந்தன், தி.மு.க. சார்பில் திரு பொன் முத்துராமலிங்கம், ஜனதா, பார்வர்ட்பிளாக் உறுப்பினர்களும், மதுரை ஆதீனம் சார்பில் சுவாமி அருணகிரியும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தமிழர்களின் பாதுகாப்பு நிலை மோசமாக இருப்பதனால் அவர்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இந்தியாவையே சாரும். இதனால் இந்தியா அங்கு இராணுவத்தை அனுப்பி இலங்கைத் தமிழர்களை பாதுகாக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இந்தக் கட்சியினரின் மாபெரும் பேரணி ஒன்றும் மதுரையில் நடைபெற்றது. (சூ)

## மூடப்பட்ட நிலையில் மானிப்பாய் இலங்கைவங்கி

(மானிப்பாய்)

கடந்தவாரம் முழுவதும் மூடப்பட்டுள்ள மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளை இவ்வாரமும் மூடப்பட்டுக் கிடக்கின்றது.

நேற்றுமுன்தினம் ஆசிரியர்களின் சம்பளதினமானதால் பல பாடசாலை அதிபர்கள் இந்த வங்கிக்கிளைக்கு தமது சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள வந்தபோது பெரும் ஏமாற்றத்துக்குள்ளானார்கள்.

அடுத்த அறிவித்தல்வரை வங்கி மூடிக்கிடக்கும்" என்ற விளம்பரப்பலகையைத் தவிர வாடிக்கையாளருக்கு பதில் சொல்ல வங்கி ஊழியர் எவரும் அங்கு காணப்படவில்லை.

வாடிக்கையாளர்கள், பாடசாலை அதிபர்கள் மானிப்பாய் வங்கிக்கிளை எப்போது திறக்கப்படுமென்று தெரியாதநிலையிலிருக்கின்றார்கள்.

## இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல்!

(புதுடில்லி)

அணிசேரா நாடான இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாக இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி கவலை தெரிவித்துள்ளார்.

இந்துமாகடல் பிராந்தியம் அமைதியற்றதொரு பிராந்தியமாக மாறிவருவது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அண்டை நாடுகளில் பெருமளவில் ஆயுதங்கள் குவிக்கப்பட்டு வருவதால் இந்திய மக்கள் அனைவரும் தத்தமது வேறுபாடுகளைமறந்து ஐக்கியப்பட்டு தேசத்தின் நன்மைக்காக உழைக்க வேண்டுமென்றும் திருமதி காந்தி நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

## கம்யூனிஸ்ட் (இடது) கட்சியின் மேதினக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தினமான மேதினத்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) யாழ்ப்பாணத்தில் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இக்கட்சியின் மேதினக் கூட்டம் அடுத்தமாதம் 1-ம் திகதி செவ்வாய்கிழமை யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு திரு.ஏ. சுப்பிரமணியம் தலைமை தாங்குவார். திருவாளர்கள் கே. செந்திவேல், சோ. தேவராஜா வை. கன்னிலிங்கம். கா. பஞ்சலிங்கம் உட்பட தொழிற் சங்க, வாலிபர் இயக்கப் பிரதிநிதிகள் உரையாற்றுவார்கள்,

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மேதினக் கூட்டத்திற்கு மாநகரசபை மண்டபத்தை மாநகரசபை நிர்வாகம் கொடுத்துள்ளது. கூட்டத்திற்கான அனுமதியை மேற்படி கட்சி பொலிஸ் அதிபரிடம் கோரியுள்ளது. (வெ)

## கிளிநொச்சி கல்வி அலுவலகம் 2-ம் திகதி திறக்கப்படும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விப்பணிப்பாளர் அலுவலகம் அடுத்தமாதம் 2-ம் திகதி உத்தியோக பூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கல்விப்பணிப்பாளர் பிரிவு ஆரம்பிக்கப்படுவதன் மூலம் கிளிநொச்சி மாவட்ட மக்களின் நீண்டகாலக்கோரிக்கையொன்று நிறைவேறியுள்ளது.

## அனுமதியின்றி வீடியோ படம் காண்பித்த தொலைக்காட்சிப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டன

(மன்னார்)

தலைமன்னார் பகுதியில் அனுமதியின்றி வீடியோ படம் காண்பித்தவர்களின் பல தொலைக்காட்சிப் பெட்டிகள், டெக், ஜெனரேட்டர்கள், வீடியோ கசற்றுகள் என்பனவற்றை தலைமன்னார் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி கே. அரசரத்தினம் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையை அடுத்தே சுமார் 8 தொலைக்காட்சிப் பெட்டிகள் டெக், ஜெனரேட்டர்கள், வீடியோ கசற் என்பன கைப்பற்றப்பட்டன. (சூ)

# இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக புதுடில்யில் மாநாடு!

## யசீர் அரபாத், றெபேட்கெனடி உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்

புதுடில்லி]

இலங்கைத்தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் மாநாடொன்று விரைவில் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இக்காநாட்டில்பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் ஜனாப் யசீர் அரபாத் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கெனடியின் சகோதரர் திரு. றொபேட் கெனடி, சர்வதேச மனித உரிமை இயக்கங்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான செயலகம் ஒன்று புதுடில்லியில் இயங்க ஆரம்பித்துள்ளது. மாநாட்டின் பணிகளை முன்னாள் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கவனித்து வருகின்றார்.

மாநாட்டுக்கு சர்வதேச இயக்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துக்கொள்வதற்கு நேரடி அழைப்பு விடுப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டு டாக்டர் திரு. வி. [illegible] சென்றுள்ளார். (செ)

## நஷ்டஈடு

மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமத்தொழில் காப்புறுதி சபையினரால் விவசாயிகளுக்கு நஷ்டஈடு பணம் கமநலசேவை நிலையங்கள் மூலம் தற்போது வழங்கப்பட்டுவருகின்றன,

இம்மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் சுமார் 85 ஆயிரம் ஏக்கர்

[7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார்ச் செய்திகள்

சி. தர்மகுலசிங்கம்

## புத்தகுரு நினைவாக விநாயகர் ஆலயம்

மடுவீதியில் புத்தகுரு ஒருவரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட விநாயகர் ஆலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் சின்னப்பண்டிவிரிச்சான் கிராமியக் கடக் குழுத் தலைவர் திரு. உதயகுமார் கலந்து கொண்டார்.

மடுவீதி யோகிராஜா விகாரையின் பரிபாலகராக இருந்து காலஞ்சென்ற வண சாஸ்திய ஆச்சார பண்டித உடகிகால நஞக குருவின் ஞாபகார்த்தமாகவே இவ்விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டது.

## வாகனங்கள் சோதனை

நாட்டின் பலபாகங்களிலிருந்தும் தலைமன்னார் துறைமுகத்திற்கு வரும் வாகனங்கள் யாவும் தலைமன்னார் பியரேசன் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

இதேபோல் தலைமன்னார் துறைமுகப் பகுதியிலிருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

## தென்னோலைக்கு கிராக்கி

மன்னார் மாவட்டத்தில் தென்னோலைக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பின்னப்பட்ட தென்னோலையின் விலை அதிகரித்துள்ளது.

## மன்னாரில் அமைதி

மன்னார்ப் பகுதியில் பூரண அமைதிநிலவுகின்றபோதிலும் சன நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது.

மன்னார்ப் பகுதியில் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம்பெற்றதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இருப்பினும் வாகனங்களில் பிரயாணம் செய்வோர் அடையாள அட்டையுடனேயே பிரயாணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## பயிற்சி வகுப்பு

தலைமன்னார் கிராமோதய சபைப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மனம் பொருள் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

தலைமன்னார் கிராமோதய சபையினால் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி வகுப்புக்கள் மே மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகும்.

## இளம் பெண் தற்கொலை

காதலித்தவனை மணமுடிக்க முடியாதநிலை ஏற்பட்டதால் விரக்தியடைந்த (19-வயது) யுவதியொருத்தி கிருமி நாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மன்னார் இலுப்பைக்குளத்தைச்சேர்ந்த புவனேஸ்வரி என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## பால் கொள்வனவு

மன்னார் மாவட்ட கால்நடை வளர்ப்பு அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பெரியபண்டிவிரிச்சான், சின்னப்பண்டிவிரிச்சான், மடு. பாலம்பிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலைக் கொள்முதல் செய்வருகிறது.

இதற்கான நடவடிக்கைகள் மன்னார் கால்நடை வைத்தியப் பகுதியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## புதிய நிர்வாகிகள்

மன்னார் பனங்கட்டுக்கொட்டு கூட்டுறவுச் சங்கத்தின் எருக்கலம்பிட்டிக் கிளையின் கூட்டுறவு மகளிர் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டோர் தலைவி ஜனாபா ஹமீது, துணைத் தலைவி ஜனாபா ஜலாலுதீன், செயலாளர் ஜனாபா அலாவுதீன், துணைச்செயலாளர் எம். எம். பரீதா, பொருளாளர் ஜனாபா சாகுல் ஹமீது.

## தொடர்ந்து தொகுப்புரை

(யாழ்ப்பாணம்)

உடுவில் இரட்டைக்கொலை வழக்கில் மூன்று நாட்களாகத் தொடர்ந்து 1ம் எதிரிக்காக சட்டத்தரணி ஆர். சிறிகிவாயா தொகுப்புரை நிகழ்த்தினார். இவ் வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றுவருகிறது. (ஈ)

## சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை மூடப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை மூடப்பட்டதன் காரணமாக வங்கி வாடிக்கையாளர்களும், பொதுமக்களும் மிகவும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த வங்கியைத் திறந்து வேலை செய்ய ஆவன செய்யவும் எனக்கோரும் ஆட்சேபத் தந்தி ஒன்றினை சாவகச்சேரி நவீனசந்தை வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் திரு கா.நகரத்தினம் இலங்கை வங்கியின் யாழ் மாவட்டப்பிரதேச முகாமையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## இன்றைய பலன்

மாதம் — சித்திரை
திகதி 14 (26-4-1984)
வாரம் — வியாழன்
திதி — ஏகாதசி பின்னிரவு 8-26 வரையும்
நக்ஷத்திரம் — சதயம் பிற்பகல் 4-54ன் மேல் பூரட்டாதி

மேடம்: குடும்பக் கவலையுடன் இருக்கு வழித்தலையீடு புதிர்போடும் வாழ்க்கையில் சோர்வுக்கும் இடம் உண்டு.

இடபம்: பெரிய இடத்து இணைகம் இன்று ஏற்படலாம் சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

மிதுனம்: ஆணவப் போக்கினால் அடிசறுக்க நேரிடும் குடும்பத்திலும் சிறிய பூசலுக்கும் இடமேற்படலாம் வயது முதிர்ந்த ஒரு பெண் மூலம் அவப்பெயருக்கும் இடமுண்டு சுகாதாரத்தைப் பேணுவதுடன் அடக்கம் நன்று.

கடகம்: வாகனத்தைப் பெறுவதுடன் வளமான வாழ்க்கை நலைவந்து சேரும் தாய்வழித் தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

சிம்மம்: அறிவுக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும் ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும் படித்தவர்கள் ஆதரவும் கிடைக்கும்.

கன்னி: தூரத்துச் செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும் பிணிக்கு இடம்கொடாது உடல்நலத்தைப் பேணவும் துக்கமான தினம்.

துலாம்: இல்பத்தில் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும் காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும் பெற்றோர்கள் ஆதரவும் உண்டு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

விருச்சிகம்: நாள் எல்லாம் அலைச்சல் உடல் நலிவு தோன்றும் பிணிக்கு இடம்கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

தனுசு: தரும காரியங்களில் ஈடுபடுவீர்கள் கற்றோரடலில் மதிப்பு உயரும் புண்ணிய ஸ்தலமொன்றிற்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம் தெய்வத்தின் துணை உண்டு.

மகரம்: உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு பெரியவர்களின் ஆசி அவசியம் உண்டு போட்டா போட்டிகளில் வெற்றி வாங்கிப்பக்கம் இருக்கும் விளையாட்டு வீரர்களாயின் முதலிடத்தைப் பெறுவர்.

கும்பம்: இலாபகரமான தினம் பொருள் வரவிற்குத் தாராளமாக இடமுண்டு வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடமுண்டு நீண்டநாள் எதிர்பார்த்த அரிய சந்தர்ப்பம் இன்று கிடைக்கக்கூடும் புத்திரர் புஷ்டி உண்டு.

மீனம்: பல வழிகளிலும் பணம் செலவாகும் தன்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் நடுநிலைமை நன்று.

## ரயில்நிலைய அதிபரை அவமதித்த பிரயாணி மன்னிப்பு கோரினார்

(மன்னார்)

தலைமன்னார்துறை ரயில் நிலைய அதிபரைத் தாக்கி அவரது கழுத்தில் இருந்த மாலையைக் கிழித்தெறிந்த வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவர் இறுதியில் ரயில்நிலைய அதிபரிடம் மன்னிப்பு கேட்டதுடன் கிழித்தெறிந்ததற்கு நஷ்டஈடும் செலுத்தினார்

இச்சம்பவம் தலைமன்னார் துறை ரயில் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லவென தலைமன்னார் துறைமுகத்திற்கு வந்த வெளிநாட்டு உல்லாசப்பயணி தாயகம் செல்லும் குடும்பங்கள் கப்பலேறச் செல்லும் வியூவில் வந்தார்.

இதனை அவதானித்த ரயில் நிலைய அதிபர் இவ்வெளிநாட்டு உல்லாசப் பயணியை உல்லாசப் பயணிகள் வியூவில் வருமாறு பணித்தார்.

இதனால் ஆத்திரம் கொண்ட வெளிநாட்டு உல்லாசப்பயணி ரயில்நிலைய அதிபரைத்தாக்கி அவரது கழுத்திலிருந்த மாலையையும் கிழித்தெறிந்தார்.

இச்சம்பவத்தையறிந்த தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து விசாரணை மேற்கொண்டார்.

இவ்விசாரணையின் இறுதியில் வெளிநாட்டு உல்லாசப்பயணி ரயில்நிலைய அதிபரிடம் மன்னிப்பு கேட்டதுடன் கிழித்தெறிந்த மாலைக்கான நஷ்டஈட்டையும் செலுத்தினார். (சூ)

## யாழ்ப்பாணப் பெண்களுக்கு சுவீடிஸ் அபிவிருத்தி நிலைய உதவி

(மானிப்பாய்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய், சாவகச்சேரி, வேலணை, பூநகரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு மகளிர் பணியகங்களுக்கு சுவீடிஸ் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் இலங்கை மகளிர் பணியகம் நடத்தும் மகளிர் சுயதொழில் பயிற்சித் திட்டங்களுக்காக ரூபா 1500க்கு மேற்படாத நன்கொடைகள் வழங்கப்படவிருக்கின்றன.

125 மகளிருக்குக் கிடைக்கத்தக்கதான பயிற்சி அமைப்பில் முதலாவது தொகுதி மகளிரின் பயிற்சி நிறைவடைந்துள்ளதாக யாழ். திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. சு. சிவதாசன் தெரிவித்துள்ளார். 2ம் தொகுதியினரைத் தெரிவு செய்யும்போது பின்வரும் தகைமைகள் கவனிக்கப்படவுள்ளன.

வாசிக்கஎழுதத் தெரிந்தவராயிருத்தல், தெரிவுசெய்யப்படுவோரில் 50வீதமானோர் உணவு முத்திரைபெறும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருத்தல் வேலைதேடுபவராய் - வேலையற்றோராய் இருத்தல், 18 வயதிற்கு மேற்பட்டவராய் இருத்தல், சமூக சேவையில் சாதனை கண்ட நிலையாட்டியவராயும், விவசாயம், கால்நடை வளர்ப்பு தைகல் முதலான துறைகளில் பயிற்சி பெற்றவராயுமிருத்தல் என்னும் தகுதிகளே பயிற்சியாளர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன.

அபிவிருத்தி அலுவலர்கள், கிராமசேவை அலுவலர்கள், விசேட சேவை உத்தியோகத்தர்கள் ஊடாக பெறப்படும் விண்ணப்பங்களிலிருந்தே பயிற்சியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

இப்பயிற்சி நெறியில் பங்குபெறும் மகளிருக்கு பயிற்சியில் கலந்துகொள்ளும் தினங்களுக்கு ரூபா பத்து வழங்குகின்றார்கள்.

இப்பயிற்சி தொடர்பான உத்தியோகபூர்வமான விபரங்களைக் கவனிக்க திட்டமிடல் அதிகாரி திரு வி. செ சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## சாவகச்சேரியில் கார் கடத்தப்பட்டு உதிரிப்பாகங்கள் திருட்டு

(கட்டுவில்)

சாவகச்சேரியிலிருந்து வரணி செல்வதற்காக வாடகைக்கு அமர்த்திச்சென்ற மோட்டார் காரை இடைநடுவில் வைத்து துப்பாக்கி முனையில் சாரதியை வெளியால் தள்ளிவிட்டு கடத்திச்சென்ற பரபரப்பூட்டும் சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமையன்று சாவகச்சேரியில் நடைபெற்றுள்ளது.

கார்ச்சாரதி செல்வராஜா என்பவர் இதுபற்றி சாவகச்சேரி பொலிசில் புகார் செய்திருந்தார். இவர் தனது புகாரில் கூறியதாவது:

புதன்கிழமை பிற்பகல் இரு வாலிபர்கள் வரணிக்குச்செல்ல எனது ஈ. வை. 4697 இலக்க காரை வாடகைக்கு அமர்த்தினார்கள் கார் வரணியைநோக்கிச் சென்றுகொண்டிருந்தது சுமார் மாலை 6 மணியிருக்கும் திடீரென ஒருவர் துப்பாக்கியை எடுத்தார். நான் காரை நிறுத்தினேன். என்னை வெளியால் தள்ளிவிட்டு காரைக் கடத்திச்சென்று விட்டனர்.

சாவகச்சேரிப் பொலிசார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையைத் தொடர்ந்து கடத்தப்பட்ட இக்கார் அனாதரவான நிலையில் கல்விபுரக் கோவிலடியில் கண்டுபிடித்தனர். காரில் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகக்கூறப் படுகிறது.

## மாங்குளம் சுற்று நீதிமன்றம்

(மட்டுவில்)

மாங்குளம், துணுக்காய், வவுனிக்குளம் பகுதி பொது மக்களின் நலன் கருதி மாங்குளத்தில் புதியதொரு சுற்று நீதிமன்றம் இம்மாதம் 27ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு வி. பி. சுந்தரலிங்கம் இதனைத் திறந்து வைக்கவுள்ளார்.

27ம் திகதி காலை இதுதிறந்து வைக்கப்பட்டதும், மாவட்ட நீதிபதி திரு. வி பி சுந்தரலிங்கம் முன்னிலையில் 4 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மாங்குளம் வடக்கு கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்திலேயே இப்புதிய சுற்று நீதிமன்றம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (சூ)

## பயிற்சியாளர் தேவை

பத்திரிகை நிறுவனத்திற்கு அச்சுக்கோர்ப்பதில் பயிற்சிபெற ஆர்வமும் உற்சாகமும் உள்ள படித்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

விண்ணப்பதாரிகள் ஜி. ஸி. ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலம், தமிழ் உட்பட ஐந்து பாடங்களுக்குக் குறையாத சித்தி பெற்றிருப்பதுடன், 18 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும். யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது அயல் கிராமங்களில் வசிப்பவராயிருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு 30-04-84க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் பிரிவுக் கிராமசேவை அலுவலரின் சான்றுப் பத்திரம், தகுதிச்சான்றுப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ஆகியவற்றின் "போட்டஸ்ட்" பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

விளம்பர இல: 1974,
ஈழநாடு லிமிட்டெட்,
தபால்பெட்டி இல: 49, யாழ்ப்பாணம்.
1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரடங்கில் சுடப்பட்டவர் அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் ஊரடங்குச் சட்ட நேரத்தில் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு நேற்று முன்தினமிரவு பலியானவர் செபஸ்தியான் சுந்தரராஜன் அல்லது இளங்கோ (25 வயது) என்று நேற்று அடையாளம் காட்டப்பட்டது.

யாழ். பெரியாஸ்பத்திரியில் இன்ஸ்பெக்டர் வே. முத்துத்தம்பி முன்னிலையில் இறந்தவரின் தந்தை செபஸ்தியான் அடையாளம் காட்டியபின் சடலம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இறந்த இளங்கோ திருமணமானவரென்றும், ஒரு குழந்தைக்குத் தந்தையென்றும், அவர் ஒரு கடற்றொழிலாளி என்றும், இரு சகோதரிகள் உண்டென்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் 9 மணிக்கு ஊரடங்குச்சட்டம் அமுலிலிருந்த நேரத்தில் வழக்கம் போல் அடுத்த வீட்டில் சைக்கிளை விடப் புறப்பட்ட போது 50 யார் தூரத்தில் சுடப்பட்டார் என்று கூறப்படுகிறது. (ஈ)

## கூட்டணித் தலைவர்கள் 5-ம் திகதி வருவர்

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய பிரமுகர்கள் அடுத்தமாதம் ஐந்தாம் திகதி நாடு திரும்பவுள்ளார்கள்.

சர்வகட்சி மாநாடு 9ம் திகதி நடைபெறவிருப்பதால் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இவர்கள் நாடு திரும்புவுள்ளனர். (வெ)

## தீக்குளிக்க முயற்சி

(மதுரை)

இலங்கைத் தமிழரைப் பாதுகாக்க இந்திய ராணுவத்தை அனுப்பவேண்டும் எனக்கோரி தி.மு.க. தொண்டர்கள் இருவர் நேற்று முன்தினம் தீக்குளிக்க முயன்றனர்.

மதுரை ரயில் நிலையத்திற்கு முன்பாக இவ்வாறு தீக்குளிக்க முயன்ற இருவரையும் பொலிசார் கைது செய்தனர். (இ)

## இப்படியும் நடக்கிறது

பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பார்கள்.

ஆனால்; பணத்தைக் கண்டதும் பொது வீதியில் கண்டு, பிணம் மட்டுமல்ல; மனிதனே வாய் பிளக்காமல் நாணயத்தின் அடுத்த பக்கத்துக்கே சென்றுவிட்டான் என்றால் ............!

இடம்: பலாலி வீதி — நாவலர் வீதிச் சந்தி, அதாவது இலுப்பையடிச் சந்தி.

பணத்தின் பெறுமதி: வெறும் நூறு அல்ல சுமார் ஆயிரமான உயர் ரக நோட்டுக்கள்.

அந்த உயர்ந்த மனிதன்: ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு. சிவசம்பு முருகன்.

இத்தனை கொடுமைகளுக்கும் மத்தியில் யாழ்ப்பாணம் உயர்ந்துதான் நிற்கிறது!

● ● ●

### தொலைபேசி என்ன செய்யும்?

வழக்கமான எல்லா சேவைகளையும் பார்க்க ஒட்டுக் கேட்பதும் இதன் 'சிறப்பு' அம்சமாகும்.

கடந்த சில நாட்களாக, குறிப்பிட்ட ஒரு யாழ். பிரமுகரின் தொலைபேசி அனுபவமாக அமைகிறதாம்.

பல சந்தர்ப்பங்களில் 'தானநிபா' மொழியிலும் சில வேளைகளில் தமிழிலும் 'அபிஷேகம்' நடக்கிறதாம்.

இதில் என்ன வேடிக்கை என்றால், எதிர்பாராததவிதமாக அந்தப் பிரமுகரின் தொலைபேசி எண்ணுடைய தொலைபேசியுடன் இணைப்பாகவே ஒரு பெரிய விஷயம் அம்பலமாயிற்று!

அதாவது, தமிழில் "அபிஷேகம்" நடத்தியவரை இனம் கண்டு கொண்ட அப்பிரமுகர், உள்ளூர்வாசியின் முகமூடியைக் கிழித்தது ......! அப்பப்பா! தொலைபேசியில்தான் எத்தனை 'ஆணை'!

'ஊடுருவி'

## "நாம் செய்கின்ற தொழிலே நமது கடவுள்"

### சுப்பிரமணியசாஸ்திரிகள் கருத்து

(யாழ்ப்பாணம்)

"கல்வியை நீதியான சிறந்த முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும். நாம் செய்கின்ற தொழில்தான் நமது கடவுள். வித்தியா குருவிடத்திலிருந்து ஞானத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும்."

இவ்வாறு நியாய சிரோமணி சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'ஈழநாடு' அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இலக்கண சுவாமிகளின் குருபூசை நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கவலைகளைக் குறைக்க நாம் பழகவேண்டும். தியானத்தினால் கவலைகளைக் குறைக்கலாம். தியானத்தினால் ஆயுள் கூடுகிறது. கஷ்டங்களைச் சமாளித்து நாம் வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

"யோக சுவாமிகள், இலக்கணசுவாமிகள் தியானத்தின் வழிகாட்டிகளாக விளங்கினார்கள். தியானம் என்பது ஒரே விடயத்தை திருப்பி திருப்பித் தொடர்ந்து நினைப்பதான ஞான அறிவாகும்.

"சிந்தை என்பது மனம். சிந்தையினால்தான் மனிதன் பலவித கஷ்டங்களை அனுபவிக்கிறான். நல்லதையே நாம் எண்ணவேண்டும்.

"நாங்கள் சுபீட்சமாக வாழ ஞானமார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும். இலக்கணசுவாமிகளின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்" என்றார்.

"ஈழநாடு" அலுவலகத்தில் இலக்கண சுவாமிகளின் குருபூஜையை நியாய சிரோமணி சுப்பிரமணிய சாஸ்திரிகள் சிறப்பாக நடாத்திவைத்தார்.

இலக்கணசுவாமிகளின் குருபூஜையை யொட்டி ஸ்ரீஞானவைரவர் சுவாமி கோவிலிலும் விசேட அபிஷேகங்களும், பூஜைகளும் இடம் பெற்றன. (வெ)

## யாழ். கல்லூரி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பிரிவுக்குள் மேற்கொள்ளப்பட்டன. நாளடைவில் தேவைகள் கூடியதால் நிர்வாகப் பிரிவுகளும் கூடின. இச்சங்கம் எழுவைதீவில் ஒரு பாடசாலையைத் தொடங்குவதற்குப் பொறுப்பாகவிருந்தது. எழுவைதீவிலிருந்து வருடாவருடம் ஒரு அல்லது இரு மாணவரைத் தெல்லிப்பழை ஆசிரிய கலாசாலைக்கும், உடுவில் மகளிர் கல்லூரிக்கும் அனுப்பி அவர்களைத் தயாரித்து வந்தது. இன்று எழுவைதீவு சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் முன்னேற்றமடைந்து விளங்குகிறது. யாழ். கல்லூரி வாலிப கிறிஸ்தவசங்கத்தின் பெருமைக்கும், மகிழ்ச்சிக்கும் சான்றாக உள்ளது. இச்சங்க உறுப்பினராய் அங்கம் வகித்து இந்தியாவில் மறைக்கல்வி அறிவுபெற்று மிகச் சிறப்பான சுவிசேட பணியில் ஈடுபட்டோர் வண. ஜே. கே. சின்னத்தம்பி, வண. வி. எம். யோன், வண. ஜசக்போல் ஆவர். இவ்வாறு உள்ளூர்ச் சுவிசேட பணியோடு வெளியூர்ச் சுவிசேடபணியும் இச்சங்கத்தின் ஆதரவுக்குள் வந்தது.

## தந்தை செல்வா..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற உண்மையை உணர்ந்து தமிழினத்தின் ஒற்றுமையையும் தனித்துவத்தையும் உலகிற்கு நிலைநாட்ட பிரதேச ரீதியாகப் பிரிந்திருந்த தமிழினத்தை ஒரே அமைப்பின் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட ஜி. ஜி. பொன்னம்பலம் (தமிழ்காங்கிரஸ்) திரு எஸ். தொண்டமான் (அகில இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) ஆகியோரைச் சேர்த்து 1970ம் ஆண்டு தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை ஏற்படுத்தி வெற்றிகண்டார்.

தந்தை அவர்கள் 20-11-75ல் தேசிய அரசுப் பேரவையிலே ஓர் வீரவுரை நிகழ்த்தினார். ஈழத்தமிழர் தங்கள் நிலைபற்றிச் சிந்தித்து ஓர் முடிவுக்கு வந்துவிட்டார்கள். இத்தீவில் ஆளப்படும் இனமாக வாழும் நிலையைத்தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எங்கள் இனம் அழிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது நாம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு ஒரு தனித்தமிழ் நாட்டை அமைத்தே தீருவோம். இக்கொள்கையை எங்கள் இயக்கத்தின் கொள்கையாக விரைவில் மாற்றியமைக்கவிருக்கிறோம் என வீரவுரையைநிகழ்த்திய பின்பு 1976ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி வட்டுக்கோட்டையிலே கூடிய தமிழ் கூட்டணியின் 1வது மாநாட்டிலே தமிழர் கூட்டணியை தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றியமைத்து இம்மாநாட்டிலேயே தனித்தமிழீழம் அமைப்பது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

உரிமைக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக அண்ணல் காந்தி அவர்கள் காட்டிய அஹிம்சை வழியே தமிழ் மக்களுக்குரிய ஒரே ஆயுதம் எனக்கருதி உண்ணாவிரதம், மறியல் போராட்டம், சத்தியாக்கிரகம் போன்ற அஹிம்சைப் போராட்டங்களை நடத்தினார். எனவே தந்தையவர்கள் ஈழத்துக்காந்தி எனவும் அழைக்கப்பட்டார்.

தந்தையவர்கள் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் அனைவரையும் 26-4-77ம் ஆண்டு அவர்கள் இந்த மண்ணில் துன்பக்கடலில் தவிக்கவிட்டு இறைவனடி எய்திய இன்றைய 7வது நினைவுதினத்தில் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கமைய நாம் எல்லோரும் ஒற்றுமையாக தந்தையின் இலட்சியத்தை ஈடேற்றுவதற்கு திடசங்கற்பம் கொள்வோமாக.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முதலாம் தவணைக்குப் பின்னர் அரசாங்க பாடசாலைகள் இன்று ஆரம்பமாகின்றன.

யாழ்ப்பாண நகரில் பாடசாலைகள் வழக்கம் போல் நடைபெறுமென்றும் நேரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் கல்வி இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன.

வழக்கம் போல் பாடசாலை பஸ் சேவைகள் இன்று முதல் நடைபெறுமென்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம், சிங்களமகா வித்தியாலயத்தில் பயின்ற மாணவர்களுக்கு அப்பாடசாலை திருத்தப்படும் வரை மாற்று ஒழுங்கு செய்யப்படவிருக்கின்றன. (க)

## 182 பேர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாக நேற்றுக் காலைவரை 182 பேர் பொலிஸில் புகார் செய்துள்ளதாகஇன்ஸ்பெக்டர் வே. முத்துத்தம்பி தெரிவித்தார் (ஈ)

## துப்பாக்கிச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை இரவு சுமார் 7.30 மணியளவில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்தது. இந்த இளைஞரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை. (வெ)

## சுஷ்டி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்று கூறுகின்றனர். இலங்கையில் தனிநாட்டுக்கோரிக்கை ஒருபோதும் கைகூடாது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதியே தீர்வுகாணப்படவேண்டும்" என்றார்

"பயங்கரவாதிகள் தமது திட்டம் நிறைவேறுமென்று எண்ணுகின்றனர். இவர்களுக்கு வெளிநாட்டு உதவிகள் இருந்தாலும் இது ஒருபோதும் கைகூடாது. பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதே எமது நோக்கம்" என்றும் அமைச்சர் கூறினார்

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உதவி வழங்கி வருவதாகக் கூறப்படுவதில் உண்மை எதுவும் இல்லை.

"இலங்கைத் தமிழ்த் தலைவர்களை நாம் எப்போதும் கைவிடப் போவதில்லை" (கு)

## பெருமளவு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இவை அனுப்பப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

275 டெட்டனேற்றர், 270 யார் எரிதிரிகள், ஏராளமான வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாக ஒருவர் கைதாகி இராணுவ விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

## பிரிட்டிஷ்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஸ் ஆகியோரையும் அவர் சந்தித்தபோது, இங்கு அசம்பாவிதங்களின்போது பலியானவர்களின் விபரங்களைப்பற்றியும் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள நிலைமை பற்றியும் எடுத்து விளக்கிக் கூறப்பட்டது.

யாழ் வாடிவீட்டில் முன்னாள் யாழ் மாநகரசபை முதல்வர் திரு இராஜா விஸ்வநாதனையும் பிரிட்டிஷ் எம். பி. திரு. கொபின் சந்தித்து உரையாடினார்

திரு கொபின் யாழ் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையாவையும் சந்தித்து உரையாடியதாகவும் தெரியவருகிறது. (க)

## மரண அறிவித்தல்

### திருமதி பூலோகநாயகி இரத்தினராசா

கொக்குவிலைச் சேர்ந்த திருமதி பூ. இரத்தினராசா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற A. V. இரத்தினராசாவின் அன்பு மனைவியும், வை. ஏகாம்பரத்தின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரன் (முன்னாள் பசுந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), தருமநாயகி, ஸ்ரீதரன் (லண்டன்), குணசீலன் (தொழில் நுட்ப உதவியாளர், நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி), சோமசுந்தரி ஆசிரியை, ஞானபண்டித வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினிதேவி, தர்மலிங்கம் (தபால் அதிபர் கிளிநொச்சி), சாவித்திரி (லண்டன்), ஜெயபூபதி சுகலிங்கம் (முன்னாள் முகாமையாளர் ஒசுசல அரச மருந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிலா, சஷீகா, சதீஸ்வரன், திகழ்மதி, ஜலஜா, லலினி, சிவகுமார், விக்கினேஸ்வரன், கிருஷ்ணகுமார், மீரா, வரதன், அஞ்சனா, ரமணன், ரமணி, ரஞ்சிதன், நிரஞ்சனா, சசிதரன் ஆகியோருடைய அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் வியாழக்கிழமை 26-4-84 (இன்று) காலை 10.00 மணிக்கு "அன்பு நிலையம்", K K S வீதி, கொக்குவில் இல்லத்தில் நடைபெறும்.

2001

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்படி வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at the General post office Sri Lanka under number, B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegrm: Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org